எண்ணிய முடிதல் வேண்டும்...!
நல்லவே எண்ணல் வேண்டும்...!!

உ
சிவமயம்
ஸ்ரீ விற்றூணியார் துணை

திண்ணிய நெஞ்சம் வேண்டும்...!!!
தெளிந்த நல்லறிவு வேண்டும்...!!!!

# எம்மாம்பூண்டிவகை ஐநூத்துச் செட்டிமார் சபை

(பதிவு எண் 20/2010)

அன்புடையீர், வணக்கம்.

நமது மகாசபையின் புதிய நிர்வாகிகளாக எங்கள் குழுவை தேர்வு செய்தமைக்கு நமது சமூகத்தினர் அனைவருக்கும், எங்கள் அனைவரின் சார்பான நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம்.

25-11-2018-ல் நடைபெற்ற பொதுக்குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களின் அடிப்படையில், 09-12-2018 மற்றும் 20-01-2019-ல் நடைபெற்ற நிர்வாகக்குழு கூட்டங்களில் விவாதிக்கப்பட்ட விசயங்கள் மற்றும் செயல் திட்டங்களின் விவரங்களை நமது சமூக மக்களுக்கு தெரிவிக்கின்றோம்.

## கெங்காதரம் செட்டியார் அறக்கட்டளை

நமது திருமண மண்டபத்தை ஒட்டியுள்ள இந்த அறக்கட்டளையின் காலியிடத்தில் கார் பார்க்கிங் வசதி ஏற்படுத்தல். இங்குள்ள மின்இணைப்புகளை ஒழுங்குபடுத்துதல். இதற்கான பணிகளை செய்ய ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

## உமையஞ்செட்டியார் அறக்கட்டளை

அறக்கட்டளைக்கு சொந்தமான கருணைபாளையம் இடத்தின் விசாரனையை முடித்து ஆனை பெற முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது. புதிய நிர்வாகிகள் முன்னாள் தலைவர் திரு. வி.எம். லஷ்மிநாராயணன் அவர்களை நேரில் சந்தித்து அவருக்கு "புரவலர்" பட்டம் வழங்க இருப்பதை தெரிவித்தோம். அவர் அதற்கு இசைவு தெரிவித்துள்ளார். அப்போது அவர் மேற்குறிப்பிட்ட இடத்தில் நல்ல திட்டங்கள் செய்யலாம் என தெரிவித்தார் அவருக்கு நமது நன்றிகளை உரித்தாக்குவோம்.

## பார்வதி கல்யாண மண்டபம்

நமது திருமண மண்டபத்தை மேம்படுத்தவேண்டும் என்பது நமது சமூகத்தவர் அனைவரின் எண்ணமாக உள்ளது. இதற்கேற்ப, 400 பேர் அமரக்கூடிய வகையில் மண்டபத்தை விரிவு படுத்துவது, மாப்பிள்ளை மற்றும் பெண் அறைகளில் அடிப்படை வசதிகளுடன், குளிர்சாதன வசதியையும் ஏற்படுத்துவது. 250 பேர் உணவருந்தும் வகையில் உணவு அறை மேம்பாடு, தங்கும் அறைகளை ஏற்படுத்துவது, மின் இணைப்பு ஒயரிங்குகளை புதிதாக்கி, தேவையான அளவு மின் விசிறிகள், மின் விளக்குகள் அமைப்பது, இப்பணிகளை மூன்று கட்டங்களாக நிறைவேற்றும் வகையில் திட்டமிட்டு, அடுத்துவரும் நமது பொதுக்குழுக் கூட்டத்தில் இதற்கான அங்கீகாரம் பெற்று, தேவையான தீர்மானங்களை நிறைவேற்றி, பணிகளை துவங்கலாம் என்று நிர்வாகக் குழுவால் முடிவு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

முதற்கட்டமாக, நமது மண்டபத்தில் நடந்துவரும் விசேஷங்களுக்கு இடையூறு இல்லாமல், முதல் மாடியில் சமையல் அறை மற்றும் உணவுவருந்தும் ஹால் அமைத்தல், கார் பார்க்கிங் வசதி ஏற்படுத்தல், மண்டபத்தின் முகப்பு தோற்றத்தை மேம்படுத்தல், மின் இணைப்புகளை புதுப்பித்து, ஜெனரேட்டர் அமைத்தல்.
**- ஆகியவற்றுக்கான தோராய மதிப்பீடு ரூ. 20 லட்சம் மட்டும்.**

இரண்டாம் கட்டமாக, திருமண மண்டபத்தின் மேற்கு பகுதியில் மாப்பிள்ளை மற்றும் பெண் அறைகளை அடிப்படை வசதியுடன் (குளிர்சாதன வசதியுடன்) ஏற்படுத்தல், மணமேடை அமைத்தல், நிலுவையிலுள்ள தங்கும் அறைகளை கட்டிமுடித்தல், பாத்திரம் கழுவும் இடித்தில் மேற்கூரை அமைத்து மண்டபத்தை விரிவாக்கல், ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.
**- ஆகியவற்றுக்கான தோராய மதிப்பீடு ரூ. 50 லட்சம் மட்டும்.**

மூன்றாம் கட்டமாக, முதல் மாடியில் உள்ள காலியிடத்தில் லைட் ரூபிங் அமைத்து உணவு வழங்கும் இடத்தை விரிவாக்கல்.
**- ஆகியவற்றுக்கான தோராய மதிப்பீடு ரூ. 30 லட்சம் மட்டும்.**

இவ்வணைத்து பணிகளையும் நம்மவர்களின் பெருவாரியான நிதி உதவி, நன்கொடைகள் மூலம் நிறைவேற்றுவதற்கு, தக்க ஆலோசனை வழங்கும்படியும் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

**பாலக்காடு ஸ்ரீ விற்றூணியார் தேவஸ்தானம்**

இங்கு மேம்பாட்டு பணிகளை மேற்கொள்வது தொடர்பான திட்டங்களை தீர்மான வடிவில் நிர்வாக குழுவிற்கு அனுப்பிவைக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. தேவசம் போர்டு வகுத்துள்ள நடைமுறைகளை செயல்படுத்த அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. இக்கோவில் தொடர்பான வழக்குகளின் விவரங்களை திரு கே.ஏ.கே. பாலகிருஷ்ணன் மற்றும் திரு ஏ.கே.கே. இராமாமிர்தம் ஆகியோரிடம் கோரப்பட்டுள்ளது.

மேலே குறிப்பிட்டுள்ள பணிகளை செய்து முடிக்க நிதிஆதாரம் மிக முக்கியமானதாகையால், நமது சமூக அன்பர்களை அணுகி, நன்கொடைபெற்று மண்டப விஸ்தரிப்பு பணிகளை செய்யலாம் என்றும், ஆயுள் உறுப்பினர் சந்தா ரூ 500 பெற்று உறுப்பினர்களை சேர்ப்பதன் மூலமும் முன்பு வழக்கத்திலிருந்த குடும்ப மகிமை என்பதற்கு பதிலாக வருடா வருடம் ரூ. 500 வீதம் நன்கொடை பெற்று கோவில் விழா மற்றும் பொது விழாக்களை நடத்தலாம் என்றும் கருதப்பட்டுள்ளது.

இந்த மேம்பாட்டு பணிகளை நிறைவேற்ற அனைவரின் பெருவாரியான ஒத்துழைப்பை அன்புடன் வேண்டுகின்றோம்.

**இங்ஙனம்**


**எம்மாம்பூண்டிவகை ஐநூத்துச் செட்டிமார் சபை**

**தலைவர் : P.S. அருணாசலம் (மணி) - 94422 91404**


**நிர்வாகக்குழு உறுப்பினர்கள் மற்றும் கமிட்டி உறுப்பினர்கள்**




மண்டப முகப்பு





சமையல் அறை, காந்திமதி ஹால் மண்டப விஸ்தரிப்பு




சமையல் அறை மற்றும் உணவு வழங்கும் அறை

# வாகனம் நிறுத்துமிடம்




PROPOSED MODERNIZATION FOR
PARVATHY KALYANAMANDAPAM AVINASHI.

கணக்கின் பெயர் : பார்வதி கல்யாண மண்டபம்
Parvathy Kalyana mandapam
கணக்கின் எண் : 6696923217
SB A/C (சேமிப்பு கணக்கு)
வங்கியின் பெயர் : இந்தியன் வங்கி, அவிநாசி கிளை
IFS CODE : IDIB000A157


GSM Prints, State Bank (Opp), Avinashi - 95781 27116

சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ

உ
சிவமயம்
ஸ்ரீ விற்றூணியார் துணை

அரிய பொருளே ! அவிநாசியப்பா !







# அவிநாசி தேர் திருவிழா மண்டபக்கட்டளை அழைப்பிதழ்

பேரன்புடையீர், வணக்கம்.

நிகழும் மங்களகரமான விகாரி வருடம் சித்திரை மாதம் 06-ம் நாள் [19.04.2019] வெள்ளிக்கிழமை காலை 10.00 மணியளவில் நமது பார்வதி கல்யாண மண்டபத்தில் ஸ்ரீ பெருங்கருணாம்பிகை அம்மன் உடனமர் அவிநாசிலிங்கேஸ்வரர் எழுந்தருளி மண்டப கட்டளை மிகச் சிறப்பாக நடைபெற உள்ளது. அதுசமயம் நம்மவர்கள் அனைவரும் வருகை புரிந்து கருணாம்பிகை அம்மன் உடனமர் அவிநாசிலிங்கேஸ்வரர் அருள்பெற்று நீண்ட ஆயுள், நிறை செல்வம், ஓங்கு புகழ், தொழில் அபரிதம் பெற்றுய்ய மெய்யன்போடு அழைக்கின்றோம்.

அனைவரும் வருக

**சித்திரை மாதம் 06-ம் நாள் [19.04.2019] வெள்ளிக்கிழமை**

| | |
|---|---|
| காலை 7.00 மணிக்கு | **அவிநாசிலிங்கேஸ்வரர் கோயில் பாதிரி மரத்து அம்மனுக்கு அபிஷேகம்** |
| காலை 9.00 மணிக்கு | **சுவாமியை மண்டபத்திற்கு அழைத்து வருதல்** |
| காலை 10.00 மணிக்கு | **மண்டபக்கட்டளை**<br>**54 திரவியங்களால் அபிஷேகம்**<br>**புஷ்பாபிஷேகம், தீபாராதனை** |

சென்ற ஆண்டு அபிஷேக திரவியங்கள், புஷ்பங்கள், மற்றும் நன்கொடைகள் வழங்கிய அனைவருக்கும் நன்றி.....

இந்த ஆண்டு அபிஷேக திரவியங்கள், புஷ்பங்கள், மற்றும் நன்கொடைகள் வரவேற்கப்படுகின்றன.

நமது சமூகத்தில் **ஆண்டு மகிமை ரூ. 500/-** கட்டாயமாக்கப்பட்டுள்ளது. அனைவரும் நிர்வாகத்தினை தொடர்பு கொண்டு மகிமை செலுத்தி இரசீது பெற்றுக்கொள்ளுமாறு நிர்வாகம் சார்பில் தகவல் தெரிவிக்கப்படுகிறது.

இங்ஙனம்,
**எம்மாபூண்டி வகை ஐநூத்துச்செட்டிமார் சமூகம்** மற்றும்
**அவிநாசி தேர் திருவிழா மண்டபக்கட்டளை கமிட்டி**
**பார்வதி கல்யாண மண்டபம்**, 37, மேற்குரத வீதி, அவிநாசி

**அனைவருக்கும் காலை, மதியம் உணவு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.**

சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ

GSM பிரிண்ட்ஸ்-அவிநாசி - 95781 27116